வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, ஆதி திராவிட மக்களுக்கு, 282 பட்டாக்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியிலே மட்டும் வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மலைவாழ் மக்களுக்கு 42 பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. தருமபுரி மாவட்டத்திலே 2012-2013 ஆம் ஆண்டு 4,500 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 4,382 நபர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் உள்ள அரூர் வட்டத்திலே மட்டும் 935 பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012-2013 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை 1,20,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவருடைய பகுதியிலே வீட்டுமனைப் பட்டாக்கள் வேண்டி காத்திருப்போர் பட்டியலில் இருப்பவர்களுக்கு மிக விரைவில் பட்டாக்கள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை வருவாய்த் துறை மூலமாக எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 378, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

378—

கூடுதல் கட்டடம்

***27800—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 மே 2

(அ) புதுக்கோட்டை தொகுதி, முள்ளூர் தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டவும், மிகவும் பழுதடைந்த கட்டடங்களைச் சீரமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, முள்ளூர் தொடக்கப் பள்ளியில் பயன்பாட்டிலுள்ள 4 வகுப்பறைகள் கொண்ட இரு ஓட்டுக் கட்டடங்களை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் ஒருங்கிணைந்த பள்ளிக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (Comprehensive School Infrastructure Development Scheme) *மூலம் மராமத்து செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.*

திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தின் கொடையே! கருணையின் பிறப்பிடமே! ஈகையின் இருப்பிடமே! கண் துஞ்சாது கடமையாற்றி, பசி நோக்காது பணிசெய்து, தன்னை மெய்வருத்தி, பள்ளிக் குழந்தைகளுக்கு போதும், போதும் என்கிற வகையில் திட்டங்களை அள்ளி, அள்ளித் தந்த பாரதி கண்ட வேலவனின் பராசக்தியே! மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை தொகுதியிலுள்ள முள்ளூர் தொடக்கப் பள்ளி வகுப்பறைகளைச் சீரமைக்க ஆணையிட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து, அந்தப் பகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் நன்றி கூறி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

2013 மே 2]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வீடற்ற, வீட்டுமனை இல்லாத ஏழை, எளிய மக்களுக்கு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்கள். நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னால், எத்தனையோ அரசுகள் தமிழ்நாட்டை ஆண்டிருக்கின்றன. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மட்டும்தான், அதிகமான எண்ணிக்கையில் வீட்டுமனைப் பட்டாக்களை ஏழை, எளிய மக்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள் என்ற புள்ளிவிவரங்களை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே மிகத் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், 2013-2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான ஆணையினைப் பெற்று, மேலும் 2 இலட்சம் பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 379, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

379—

ஆரம்ப சுகாதார நிலையம்

***3654—திருமதி மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, சாமல்பட்டியில் தற்போதுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகளுடன்கூடிய சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?